**திஸ்ஸமஹாராம பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டு நிறுவனம் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 03 மூலதன செயற்திட்டங்களுக்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 666,782 இனால் குறைவாகவும், மேலும், 05 செயற்திட்டங்களுக்கான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 428,736 இனால் கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களின் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,630,098 தொகையான செலவினங்கள் மற்றும் சபைக்குச் சொந்தமான 10 வாகனங்களின் 29 தையல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் 53 தளபாடங்களின் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 18 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 9,647,005 கூட்டுத்தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மூன்று செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 28,540,041 ஆன நிலுவை மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) 2004 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,395,947 தொகையான கடன் பணம் மற்றும் அதற்குரிய ரூபா 2,491,784 தொகையான வட்டிப் பணத்தின் எந்தவொரு தவணையையும் செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 408,882 கூட்டுத்தொகையான பல்வேறு வகைகள் 02 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித கடன்கொடுத்தோருக்காவும் தொழிற்சாலை கடன்கொடுத்தோருக்காகவும் முறையே ரூபா 6,195,744 மற்றும் ரூபா 28,507,908 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் காணப்பட்டதுடன், அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 23,683,159 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் உரித்துறுதிகள், கையளிப்புக் கட்டளைகள், அனுமதிப்பத்திரங்கள், ரூபா 34,676 கூட்டுத்தொகையான சபையின் வைப்பு மீதிகள் தொடர்பான பதிவேடுகள் மற்றும் விரிவான பட்டோலைகள், ரூபா 37,281,389 கூட்டுத்தொகையான 11 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையின் விதி 185 | பிரதேச சபையின் பொதுக் கணக்கில் மற்றும் கைத்தொழில் கணக்கில் முறையே ரூபா 1,985,113 மற்றும் ரூபா 3,135,863 தொகையான மாதாநத சராசரி மிகைப் பண மீதிகள் காணப்பட்ட போதிலும், அவற்றை முதலீடு செய்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 193 | பாதிடப்பட்ட மற்றும் குறைநிரப்பு அனுமதிக்கப்பட்ட செலவினங்களுடன் செலவின விடயங்களின் உள்ளபடியான செலவினங்களை ஒப்பிட்டு மிகைகள் மற்றும் பற்றாக்குறை தொடர்பிலான காரணங்களை எட்டும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | i. நிதிப்பிரமாணம் 571 (3) | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களைக் கடந்திருந்த ரூபா 3,149,446 கூட்டுத்தொகையான 06 வைப்பு மீதிகளை ஒழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | ii. நிதிப்பிரமாணம் 371 | வழங்கிய பணி முடிவடைந்தவுடன் முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 168,649 தொகையான முற்பணத் தொகை 2017 மே 12 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08 பொது (i) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4.3 (ஆ) மற்றும் (அ) பிரிவு | சபையில் சேவையாற்றி பின் இடமாற்றம் பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்தும் சேவையிலிருந்து விலக்கப்பட்ட, விலகிச்சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 20,261 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.7 போதியளவு அதிகாரத்தினால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

சபைக்குச் சொந்தமான கெப் வண்டியொன்றுக்காக புதிய என்ஜினொன்று பொருத்தப்பட்டிருந்த போதிலும், பதிவு தகவல்கள் சட்டரீதியான திருத்தியமைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,023,232 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,033,766 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 6,989,466 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் வருமானத்தில் 85 சதவீதமான உயர்வான பெறுமானத்துடனான செலவினங்கள் காணப்பட்டதுடன், அது நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்திகரமான நிலையொன்றல்ல என்பதை பிரதிபலித்தது.

(ஆ) சபையின் சுயமாக ஈட்டப்பட்ட வருமானத்தின் அளவினை மிகைத்து கடந்த இரு ஆண்டுகளிலும் மீளாய்வாண்டின் போதும் மீண்டெழும் செலவினம் தொடர்ச்சியாக கவனத்தில் கொள்ளக்கூடிய பெறுமதிகளில் அதிகரித்துள்ளமையே காண்பிக்கின்றது.

(இ) கடந்த ஆண்டின் இறுதியில் உள்ளவாறான திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 11,304,323 ஆன மறைப் பெறுமதியாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அந்த மறைப் பெறுமதி ரூபா 49,936,511 வரை அதிகரிதிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்தில் ரூபா 38,632,188 ஆன குறைவொன்றினைக் காட்டியது.

(ஈ) 2004, 2005 ஆகிய வருடங்களின் உள்நாட்டு மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைக்குரிய கணக்கு வைக்கப்படாத ரூபா 42,464,461 தொகையான வட்டியை கணக்கு வைத்தல் மற்றும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 5,515,970 தொகையான சிராமத்திற்கு கிராமம் வீட்டுக்கு வீடு பணிக்கான மானியம் பெறுநர்களை ஒழுங்குபடுத்தல் போன்ற சீராக்கங்கள் திரண்ட நிதியத்தினூடாக மேற்கொள்ளப்பட்டமை திரண்ட நிதியத்தின் வரவு மீதி ரூபா 49,936,511 வரை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்திருந்தது.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டினுள் வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டது.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 46.78 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 32.15 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலிலான செயன்முன்னேற்றம் 69 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14.29 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 6.35 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் 44 சதவீதமாக இருந்தது.

**2.3.2 வீதவரியும் வரியும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆரம்ப நிலுவை ரூபா 3,588,302 ஆக இருந்ததுடன், ரூபா 2,967,462 தொகையான பட்டியல்களுடன் ரூபா 6,555,784 தொகை அறவிடப்படவேண்டியதாக காணப்பட்டது. ஆண்டினுள் பட்டியலகளின் 06 சதவீதம் மற்றும் நிலுவையின் 33 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை வீத வரி பெறுமதி ரூபா 3,314,958 ஆகும். அந்த நிலுவை வீத வரியினை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதவரியினை விதிப்பதற்கான மதிப்பீடானது ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு தடவையாவது மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டின் போது வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 குத்தகை வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடை அறை வாடகை

(i) சபைக்குச் சொந்தமான 246 சடைகளுக்குரியதாக 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 819,177 தொகையான வாடகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. நிலுவை வாடகை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுத்து அந்தப் பணத்தை தண்டப்பணத்துடன் அறவிடுவதற்கோ அரசுடமையாக்குவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய ஒவ்வொரு உடன்படிக்கையும் 03 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான 283 கடை அறைகளின் உடன்படிக்கைகள் தொடர்பில் அதற்கினங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபைக்குச் சொந்தமான 30 சடை அறைகளுக்குரிய மாதாந்த பட்டியல்கள் பல வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த கடை அறைகளை பழுதுபார்த்து அல்லது தேவையான அடிப்படை வசதிகளை வழங்கி மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீட்டு வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான வீடுகளுக்காக ரூபா 76,075 தொகையான நிலுவை வாடகை நிலவியதுடன், அந்த பணத்தை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நீதிமன்ற தண்டப்பணத்திற்காக ரூபா 976,688 தொகையும், முத்திரைக் கட்டணங்களுக்காக ரூபா 10,178,017 தொகையும் பெற வேண்டியதாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வாகனங்களை வாடகைக்கு விடும்போது பதிவேடுகளுக்கமைய இறுதியில் உள்ளபடியான நிலுவை வாகன வாடகை ரூபா 516,030 ஆக இருந்ததுடன், அதற்கு 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 364,900 தொகையான பணமும் உள்ளடங்கியிருந்தது. இந்த பணம் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பயன்படுத்தப்படும் 15 வாகனங்களின் உரித்தினை கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் விலைக்கேள்வி வைப்புக்கள் மற்றும் நானாவித வைப்புப் பதிவேடு முறையாகவும் நதளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உழவு இயந்திரங்கள் மற்றும் மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றை ஏலமிடுவதற்காக 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், 2017 மே 12 ஆந் திகதி வரையிலும் அந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரங்கள், பெஜிரோ வண்டியொன்று, கற்களை நொறுக்கும் இயந்திரமொன்று, இரு மோட்டார் படகுகள், 29 தையல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் 4’ மற்றும் 2’ அளவான 172 டியூப் லைட்கள் நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்ற போதிலும், அந்த சொத்துக்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு அகற்றப்படும் குப்பைகள் நீங்கலாக நாளாந்தம் சேகரிக்கப்படும் எஞ்சிய குப்பைகள் சுமார் 20 வருட காலமாக வன பாதுகாப்பு திணைக்களத்திற்குரிய உத்தகன்தர பகுதியின் இடமொன்றில் முறையற்ற விதத்தில் கொட்டப்பட்டவாறு இருந்தது.

(ஆ) கழிவுகள் கொட்டப்பட்டிருந்த நிலப் பிரதேசத்தில் ஒரு பகுதியில் குப்பைகளை எரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் சூழலுக்கு தீங்கிளைக்கும் வாயுக்கள் விடுவிக்கப்படுகின்றனவா என்பது தொடர்பில் தேடிப்பார்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த பணிகள் மக்கள் சுகாதார பரிசோதகர் ஒருவரின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) குப்பை கொட்டப்படும் நிலப்பகுதியை சுற்றி பாதுகாப்பு வேலியொன்று நிர்மாணிக்கப்பட்டிராததுடன், அதன் காரணமாக குப்பைகள் கொட்டப்படும் இடத்திற்கு யானைகள், கால்நடைகள் மற்றும் மற்றைய விலங்குகள் உட்புகுந்திருந்ததுடன், வெளித்தரப்பினராலும், இப்பிரதேசத்தில் குப்பைகள் கொட்டப்பட்டிருந்தன.

(ஈ) கதிர்வீச்சுடைய கழிவுகள் மூலம் சூழலுக்கு போன்று உயிரினங்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. திறந்த வெளியில் அந்தக் கழிவுகளை கொட:டவதற்கு கூட்டெரு நிலையம் அமைந்துள்ள நிலப்பிரதேநமொன்றில் தேக்கி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அகற்றப்பட்டிருந்த பிளாஸ்ரிக் கண்ணாடிகள், மட்பாண்டங்கள், டயர் மற்றும் தொடர்பான பல்வேறு இடங்களிலும் நீர் தேங்கியிருந்ததுடன், அதன் மூலம் நுளம்புகள் மற்றும் ஈக்கள் உள்ளடங்கலான நோய்களை உருவாக:கும் கிருமிகள் பெருகுவதற்கான இடமிளிக்கப்பட்டிருந்தது. நோய் பரப்பிகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக நுளம்பு எண்ணெய் விசுறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், பிரதேசமெங்கிலும் வீசும் துர்நாற்றத்தை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 பதவியணியினர் நிர்வாகம்**

அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய 10 பதவிகளின் 18 வெற்றிடங்களும், மேலும் 10 பதவிகளின் 51 மிகைப் பதவியனிகளின் எண்ணிக்கையும் காணப்பட்டது. இந்த 51 மிகை ஊழியர்களுக்கிடையே 37 பேர் அமைய அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை எண்ணிக்கையை முறைமைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாயவாண்டிற்கான பாதீட்டிவ் உள்ளடக்கப்பட்டுள்ள 17 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,091,500 தொகையான மொத்த நிதியேற்பாட்டிலான சேமிப்பும், 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,010,000 தொகையான நிதியேற்பாடு முழுமையான ஏகைய செலவின விடயங்களுக்கு மாற்றங்களும், 02 செலவின விடயங்களின் பாதகமான விலகல் ரூபா 8,135,873 ஆனமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு